
# வெள்ளி

VELLI
News
Magazine

30
சதம்



## சிவாஜியின் நடிப்பு — உங்கள் கருத்து?

(பரிசு விபரம் — 4ம் பக்கம்)

## 'நான்' அல்ல; 'நாம்

'செல்வா

நவம்பர் '71

நம்பிக்கை
நாணயம் மிக்க

## தங்க, வைர நகைகளை

வாங்கவும்

**நீங்கள் விரும்பிய டிசைன்களில்**

*ஓடர் கொடுக்கவும்*

---

# ராணி

## ஆபரண மாளிகை

---

கண்கவர் டிசைன்களை கவர்ச்சிகரமாக அமைக்கிறார்கள்.

# RANEE JEWELLERS

224, கே. கே. எஸ். வீதி, :: யாழ்ப்பாணம்

# 'லவ் லெட்டர்' மொழி!.....

''லண்டன் முரசு தரும் செந்தமிழ்'' என்ற தலையங்கத்தின் கீழ் கடந்தமாத ''வெள்ளி''யில் வெளிவந்த தகவல் பலரையும் சிந்திக்க வைத்திருக்கும் என்பதில் ஐயமில்லை. அத்தகவலில் தமிழ் எழுத்துக்களின் தொகையைக் குறைப்பதற்கு ஒரு வழியைக் கட்டுரை ஆசிரியர் கூறியிருக்கிறுர்:

கட்டுரை ஆசிரியரின் கூற்றுப்படி எழுத்தின் தொகையைக் குறைக்கலாமே தவிர, சொல்லில் தூரத்தைக் குறைக்கமுடியாது. அதற்கு மாருக சொல்லின் தூரம் இரண்டு மடங்காக அதிகரிக்கும் என்பதைக் கட்டுரை ஆசிரியர் சிந்திக்கவில்லைப்போலும்!

உதாரணமாக, ''முரசு'' என்ற சொல்லை இப்போது மூன்று எழுத்துக்களில் எழுதிவிடலாம். ஆனுல் லண்டன் முரசின் கூற்றுப் படி முரசு என்ற சொல்லை 'ம்உர்அச்உ'' என்றுதான் எழுதவேண்டும். இதனுல் ஒரு சொல்லின் தூரம் இரண்டு மடங்காகிறது இதன் காரணமாக பத்திரிகை, புத்தகம் போன்றவற்றிற்குத் தேவைப்படும் காகிதத்தின் தொகையும் அதிகரித்து அதன் செலவும் அதிகரிக்கும் என்பதை கட்டுரை ஆசிரியர் அறியமாட்டாரா?

கட்டுரை ஆசிரியரின் 'இந்த கண்டுபிடிப்பு'க்கு முன்னரே எமது 'மன்மதக் குஞ்சிகள்' இதைக் கண்டுபிடித்து தமது காதலர்களுக்கு, 'லவ் லெட்டர்' எழுதுவதை பலர் அறிந்திருப்பார்கள்!

அம்பிலாந்துறை, — ''துகிலிகை''

**தீபாவளிச் சிறப்பிதழ்!**

தீபாவளிச் சிறப்பிதழ் மிகமிகச் சிறப்பாக அமைந்து விட்டது! 'வெள்ளி' யின் ஒவ்வொரு இதழையுமே இப்படி வெளியிடமுடியாதா?

கொழும்பு-11. — சி. நடராசா.


**'தமிழ்' அமைச்சரா**

'தமிழ் அமைச்சருடன் ஒரு சந்திப்பு' ஒரு நல்ல அம்சம். அது ஏன் 'தமிழ்' அமைச்சர் என்று பிரிக்கிறீர்கள்? தமிழருக்கு மட்டுமா அமைச்சர்? சிங்களவருக்கும் அமைச்சர்தானே!

யாழ்ப்பாணம் — ம. சிவசம்பு.

புராண இதிகாசப் பிரியரான தமிழமைச்சர் புதிய சஞ்சிகைகளைப் படிக்காத தமிழமைச்சர், தமிழ் மறுமலர்ச்சி இலக்கியத்துக்கு மனப்பூர்வமாகப் பெரிய உதவிகள் செய்வாரென்று எதிர்பார்க்க முடியுமா?

வெள்ளவத்தை, — கே. எஸ்



# 'நான்' அல்ல; 'நாம்' சொன்னோம்!

அண்மையில் தமிழரசுத் தலைவர் செல்வா அவர்களை பத்திரிகை நிருபர் ஒருவர் பேட்டி கண்டார். நிருபர் தனது கேள்விகளுக்கு செல்வா அவர்கள் அளித்த பதில்களைக் குறிப்பெடுத்து வந்தார். 'பங்களாதேஷ்' பற்றிய கேள்வி யொன்றிற்கு செல்வா தந்த பதிலைப் பேட்டி கண்டவர் ''மதத்தைவிட மொழிக்கு ஈழம்வாழ் முஸ்லிம் பெருமக்கள் முக்கிய இடம் தரவேண்டும் என்று நான் கடந்த இருபது வருடங்களாக வலியுறுத்தி வருகிறேன்'' என்று குறித்திருந்தார். பேட்டியின் இறுதியில் தனது குறிப்பினை நிருபர் திரும்ப வாசித்துக் காட்டினார். மேற்கண்ட வாக்கியத்தைப் படித்ததும் ''இல்லை இல்லை...நான் அப்படிச் சொல்லவில்லை'' என்றார் செல்வா. இதைக்கேட்ட நிருபர் திகைத்துவிட்டார். தொடர்ந்து பேசிய செல்வா, ''நாம் கடந்த இருபது வருடங்களாக வலியுறுத்தி வருகிறோம் என்றுதான் சொன்னேன்'' என்று கூறியதும்தான் நிருபரின் ஆச்சரியம் நீங்கியது. 'நான்' என்ற அகந்தையற்று தமது கட்சிக்குப் பெருமதிப்பு அளித்து வரும் சிறந்த தலைவர் செல்வா!

— 'காசிப்பன்'
கொழும்பு-13

- அரசியல் வாதி
- இலக்கியரசிகர்
- சினிமா ரசிகர்

# இவர்களும்

○ அநியாயம்! அக்கிரமம்! தென்னிந்தியத் தமிழ் மக்களோடு ஈழத் தமிழ் மக்களுக்குள்ள கலை இலக்கியத் தொடர்பை அழித்தொழிப்பதே இப்பத்திரிகைத் தடையின் நோக்கம்! பிற நாடுகளிலிருந்து இறக்குமதியாகும் ஆங்கில சஞ்சிகைகளுக்கெல்லாம் தடையில்லை; தமிழ்ப் பத்திரிகைகளுக்கு மட்டும் தடை விதிப்பானேன்? ஈழத் தமிழினத்தின் மொழியையும் கலாச்சாரத்தையும் பூண்டோடு அழித்து விடுவதற்கான முயற்சிகளில் இதுவுமொன்று. சிங்கள அரசாங்கத்திடம் நல்ல பிள்ளைப் பட்டம் பெற விரும்புவோர் எடுத்துள்ள இந்த விபரீத முயற்சியை நான் முழு மூச்சாக எதிர்க்கிறேன்.

—ஒரு தமிழ் அரசியல்வாதி

○ எதிர்க்கிறேன், 'செவிக்குணவு இல்லாதபோது சிறிது வயிற்றுக்கும் ஈயப்படும்' என்பது தமிழ்க் கருத்து. 'செவி' எனப்பட்டது 'செவி' மூலம் பெறுகின்ற அறிவையே. எமது அறிவுப் பசியைத் தீர்க்கின்ற தமிழகத்துச் சஞ்சிகைகளுக்குத் தடைபோடலாமா? உணவுப் பொருளைவிட அவசியமான, மேலான ஒன்றுக்குத் தடையா?

— ஒரு இலக்கிய ரசிகர்

○ பொழுதுபோக்குக்கு வழியற்ற மக்கள் நடைப் பிணத்துக்குச் சமம். தமிழ் ஏழை மக்களின் ஒரே ஒரு பொழுது போக்கு 'சினிமா' அந்தச் சினிமாவை கண்டு ரசிக்க உதவுபவை தமிழகத்திலிருந்து வரும் சினிமாச் சஞ்சிகைகள். அவற்றைத் தடைசெய்தபின், அவற்றுக்குப் பதிலாக எவற்றைக் கொடுக்கப் போகிறது இலங்கை அரசு? 'பொம்மை', 'பேசும்படம்' முதலியவை போல ஒரு பத்திரிகையையாவது தரமுடியுமா இவர்களால்?— ஏழைமக்களுக்குச் செய்யும் அநியாயம் இது!

— ஒரு சினிமா ரசிகர்

# இவரும்!

● கலை, இலக்கிய ரசிகரான தேசியவாதி

○ துணிவகைக்குத் தடை விதித்தபோது 'மானத்தைக் காக்கவும் வழியில்லையா' என்றார்கள். சவர அலகுகளை தடைசெய்த போது 'தாடி வளர்ப்பதா?' என்றார்கள். ஆனால் இவற்றுக்கெல்லாம் ஓரளவு திருப்திகரமாக மாற்றுப் பொருள்கள் இந்த நாட்டில் உற்பத்தியாகவில்லையா? துணிவகைக்குத் தடைவிதியாதிருந்தால் எப்படி இந்த நாட்டில் ஒருபோதுமே நெசவுத் தொழில் வெற்றிகரமாக அமைய முடியாதிருந்திருக்குமோ, அதுபோலவே சஞ்சிகைகளுக்குக் கட்டுப்பாடு போடாவிட்டால் இந்தநாட்டில் சஞ்சிகைகளும் ஒருபோதும் தோன்றி நிலைக்க முடியாது. நிலைத்தாலும் நல்லமுறையில் வெளிவரமுடியாது. 'எங்கள் நாட்டில் சஞ்சிகைகள் தோன்ற வேண்டாம். தமிழகத்திலிருந்தே அவற்றை இறக்குமதி செய்து கொள்வோம்' என்று யாராவது நினைக்க முடியுமா? சிறிது காலத்துக்கு வாசகர்களுக்கு கஷ்டமாகத்தானிருக்கும். நமது எதிர்காலச் சந்ததியினரை முன்னிட்டாவது நாங்கள் சிறு தியாகம் செய்வோம் நிச்சயம் வெற்றி காண்போம்.


'வெளிநாடுகளிலிருந்து வரும் ஆங்கிலச் சஞ்சிகைகளுக்கு மட்டும் தடையில்லையா?' என்று கேட்பது அர்த்தமற்றது. ஒரு சஞ்சிகையையாவது ஆங்கிலத்தில் நடத்த வேண்டுமென்று ஆவல் கொள்ளுமளவுக்கு, இங்கே ஆங்கிலத்தைத் தாய்மொழியாகக் கொண்ட கணிசமான தொகையினர் இல்லை. ஆனால், தமிழர்களுடைய நிலைவேறு. தமிழர்கள் தங்களுக்கென்று இந்த நாட்டில் பல சஞ்சிகைகளை தோற்றுவிக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுக்கவேண்டியது அரசினரின் கண்டிப்பான கடமையாகும்!

இந்தியச் சஞ்சிகைகளைப் படியாமல் ஒரு வாரத்தைக் கழிப்பதற்குக்கூட மிகவும் சிரமப்படும் நான், இந்த நாட்டுத் தமிழ் சஞ்சிகைகளின் எதிர்கால வளர்ச்சிக்காக, இந்தக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை மனப்பூர்வமாக வரவேற்கிறேன்.

— கலை, இலக்கிய ரசிகரான ஒரு தேசியவாதி

✣ நன்ருக நடனம் ஆடத் தெரிந்த சினிமா நடிகர்களுள் ஒருவர் சிரிப்பு நடிகர் சந்திரபாபு! வசனத்தின் மூலம் சிரிப்பு மூட்டாமல் நடிப்பு மூலம் சிரிப்பு மூட்டத் தெரிந்த நகைச்சுவை நடிகர் இவர்! அற்புதமாகப் பாடக்கூடிய திறமையும் வாய்ந்தவர்! இவ்வளவும் இருந்துமென்ன? இப்போது வரும் சினிமாக்களில் இவருக்கு சான்ஸ் கிடைப்பது குதிரைக் கொம்பாக இருக்கிறது! காரணம் என்ன? எதற்கும் 'ஆமாம் சாமி' போடும் ஆளாக இல்லாமல் சில சுய சிந்தனைகள் உள்ள மனிதராக இவர் இருப்பதுதான்!



✣ நடிகை சௌகார் ஜானகி தனது வீட்டில் உள்ள எல்லா அறைகளிலும் சமையல் அறையையே அதிக சுத்தமானதாக வைத்திருப்பதற்கு தான் அக்கறை காட்டி வருவதாகச் சொல்லியிருக்கிருர்! ஆனல் பெரும்பாலான நடிகைகள் தமது வீட்டிலுள்ள எந்த அறையை பிரம்மாதமாக அலங்கரித்து வைத்திருக்கிருர்கள் என்பது ரசிகர்களுக்கெல்லாம் நன்கு தெரிந்த சங்கதியாகும்!

✣ சோவியத் நாட்டில் 560 ஆயிரம் ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட செயற்கைக் கடல் ஒன்றை உருவாக்கி இருக்கிருர்கள்! இந்தக் கடலில் ஏராளமான மீன்களை வளர்த்து வருகிருர்கள்! இதன் காரணமாக சோவியத் நாட்டில் கணிசமான அளவு மீன் உற்பத்தி அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கிருர்கள் சோவியத் விஞ்ஞானிகள்! கம்யூனிஸ அரசாங்கம் ஏற்பட்ட பின்னர் அந்த நாட்டில் ஆக்கத்துறை விஞ்ஞான முயற்சிகள் பெருமளவுக்கு வளர்ந்து இருக்கின்றன!



## இவர் நடிப்பைப்பற்றி உங்கள் கருத்து என்ன?

### பரிசு ரூபா 25/-

'வெள்ளி' ஓகஸ்ட் இதழில் 'தெய்வமகன்' படத்தைப்பற்றிக் குறிப்பிட்டபோது, ''சிவாஜியின் நடிப்பு 'ஓவருக்கும் மேலே 'ஓவர்' என்று எழுதியிருந்தேன். அதைச் சிலர் பாராட்டியும், சிலர் கண்டித்தும் கடிதம் எழுதியிருந்தார்கள். கண்டித்து எழுதியவர்களில் நேர்மையாக எழுதியவர்கள் சிலர்; வேறு சிலர் நான் சிவாஜியைத் தாக்கி எழுதியிருப்பதாகத் தவறாக நினைத்துக்கொண்டு, அவரவர் அறிவுக்கெட்டியவரையில் ஏதோதோ எழுதியிருந்தார்கள்.

'தமிழகத்தின் தவநடிகர் சிவாஜி கணேசன்' என்பதை எவருமே மறுக்கமாட்டார்கள். ஆயினும், கடவுளுடைய செயலானாலும்கூட அதுபற்றி அபிப்பிராயம் சொல்லும் உரிமை மனிதனுக்கு உண்டு.

'நெற்றிக்கண் காட்டினாலும் குற்றம் குற்றமே' என்றானல்லவா, நக்கீரன்?

நல்லது, சிவாஜியின் நடிப்பைப் பற்றி உங்கள் விமர்சனம் என்ன?

குறைகளை மட்டும் எழுதுவது சிறந்த விமர்சனம் ஆகாது; சிறப்புகளையும் எடுத்துக் கூறுங்கள்.

சொந்த விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால், நடுநிலையில நின்று எழுதுங்கள்.

உங்கள் கருத்துக்கள் 'வெள்ளி'யில் ஒருபக்கத்துக்குள் அமைவதே நல்லது. அதிகமானால் இரண்டு பக்கங்கள் வரலாம். மிகச்சிறந்த கருத்தை எழுதும் ஒவருவருக்கு ரூ. 25/- பரிசு பரிசு கிடைக்கும். (ரூ. 15 ரொக்கமாகவும், ரூ. 10 க்கு ஈழத்து எழுத்தாளர்களின் நூல்களும் கிடைக்கும்.)

அனுப்பும் உறையின் மேல் கீழேயுள்ள முகவரியை வெட்டி ஒட்டி 12-12-71க்கு முன் எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பவேண்டும்.

*

***

**"வெள்ளி"**

226, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

*

✣ ரத்கமைத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரும், கம்யூனிஸ்ட் கட்சித் தோழருமான எம். ஜி. மென்டிஸுக்கு சென்ற மாதத்தில் அறுபது வயது பூர்த்தியாகிவிட்டது! தொழிற் சங்கங்கள் பலவற்றைக் கட்டி வளர்ப்பதில் அயராது அமைதியாக உழைத்த பெருமகன் இவர்! ஆரம்பத்தில் இவரும் ஒரு சமசமாஜக் கட்சி உறுப்பினராகத்தான் இருந்து வந்தார்! ஆனால் 1940ம் ஆண்டில் கம்யூனிஸ்ட் தலைவர் விக்கிரமசிங்காவோடு சேர்த்து இவரும் அந்தக் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டார்! 1940ம் ஆண்டில் ஐக்கிய சோசலிஸ்ட் கட்சியை நிறுவியவர்களில் இவரும் ஒருவர்! ஆனால் 1943ம் ஆண்டில் கம்யூனிஸ்ட் கட்சி தோற்றுவிக்கப்பட்டபோது அதன் ஆரம்பகால உறுப்பினர்களுள் இவரும் ஒருவரானார்! அன்றிலிருந்து இன்று வரை இவர் அந்தக் கட்சிக்காகத்தான் உழைத்து வருகிறார்! அமைதியாக, ஆனால் உறுதியாகச் செயல்படும் இவரைப் போன்றவர்கள் இரண்டொருவர் இருந்தாலே போதும் ஒரு கட்சியைக் கட்டி வளர்ப்பதற்கு!

✣ சோவியத் அரசாங்கத்தினால் தயாரிக்கப்பட்ட "மிக்" விமானங்களைப் பற்றிய விபரங்களை யெல்லாம் அந்த நாட்டு அரசாங்கம் மிகவும் உயர்தரராணுவ ரகசியமாகவே பாதுகாத்து வருகிறது! ஆனால், இவற்றின் அமைப்பைப் பற்றிய சில தகவல்களை அமெரிக்காவின் உளவுச் சேவையினர் சேகரித்துள்ளனர்! ரஷ்யாவினால் மிக் விமானங்கள் கொடுத்து உதவப்பட்ட நாடுகளிலுள்ள யாராவது ஒரு விமானிக்கு பெரும் பணம் லஞ்சமாகக் கொடுத்து, அதற்கு ஈடாக அவ் விமானி ஒரு மிக் விமானத்தைத் திருடிக்கொண்டு வந்து அமெரிக்காவிடம் சேர்ப்பித்த நிகழ்ச்சிகளும் பல நடந்துள்ளன. சோவியத் அரசாங்கத்தினால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட ஆறு மிக் விமானங்கள் எமதுவிமானப் படையிடம் இருக்கின்றன!

✣ மேற்கு பாகிஸ்தானிய ராணுவ ஆட்சியாளரின் அடக்குமுறை ஆட்சிக்கு எதிராகப் போராடும் கிழக்கு வங்க மக்களுக்கு ஆதரவாக, தமது தார்மீக ஆதரவை, மிகவும் உற்சாகமான முறையில் தெரிவித்த நமது நாடாளுமன்ற உறுப்பினர்களுள் இருவர் குறிப்பிடத்தக்கவர்கள்! பெர்னாட் சொய்சாவும், விவியன் குணவர்த்தனவும்தான் அந்த இருவரும்!

✣ கம்யூனிஸ்ட் கட்சி, சமசமாஜக்கட்சி ஆகிய இடதுசாரிக் கட்சிகளிலுள்ள பெருந்தலைவர்கள் எல்லாரது ஆதரவும் வங்காள தேசப் பிரச்சினையில் கிழக்கு வங்காளிகள் பக்கம்தான் இருந்து வருகின்றன! இந்த இரு கட்சியினராலும் வெளியிடப்படும் பத்திரிகைகள் எல்லாம் கிழக்கு வங்க மக்களுக்கு ஆதரவாகவே தமது கருத்தைத் தெரிவித்து வருகின்றன!

# கேள்வி-பதில்

சாமீஜ்

ஏ. எல். எம். ராசீக், தெலியா கொன்னே.

✶ நடிகைகளைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

நாடகத்திலோ அல்லது சினிமாவிலோ நடிப்பவர்களைக் குறை சொல்ல முடியாது. அவர்கள் ஒரு தொழிலை மேற்கொண்டு இருக்கிறார்கள். ஆனால், வாழ்க்கையில் நடிப்பவர்கள் ஆபத்தானவர்கள்.

க. பரஞ்சோதி, நுவரேலியா.

✶ காதல் திருமணங்களை ஆதரிக்கிறீர்களா?

நிச்சயமாக! காதலர்களுக்கு மன நிறைவைத் தருவதோடு மட்டுமல்லாமல், காதல் திருமணங்கள் ஒரு சமுதாயப் பணியையுஞ் செய்கின்றன. எல்லாச் சமுதாயங்களிலும் எந்தக் காலத்திலுமே ஏதாவது ஒரு வகையில் ஏற்றத் தாழ்வுகள் இருந்துகொண்டுதான் வருகின்றன. அந்த ஏற்றத் தாழ்வுகள் பலம் பெற்று மக்களை நிலையாகப் பிரித்துவிடாமல் இருக்க வேண்டுமானால் ஏதோ ஒரு வழியில் அந்த ஏற்றத் தாழ்வுகளை ஒழிக்கவேண்டும். காதல் திருமணங்கள் இத்தகைய ஏற்றத் தாழ்வுகளை ஒழிப்பதில் பெரும் பங்கு வகிக்கின்றன!

க. சிவகடாட்சம், கொழும்பு.

✶ இந்த நாடு முன்னேற நீங்கள் கூறும் யோசனை என்ன?

என்ன செய்தாயினும் சரி, நான் சார்ந்துள்ள கட்சியை வார்த்துப் பலப்படுத்துவதே எனது முதற்கடமை என்றும் எப்பாடுபட்டாயினும் எனது பதவியை நான் காத்துக் கொள்ள வேண்டும் என்றும், நினைக்கின்ற தலைவர்களின் தொகை குறைய வேண்டும்; மக்களின் வாழ்க்கைப் பிரச்சினைகளைப் பற்றிச் சிந்தித்துச் செயலாற்றுகின்ற தலைவர்களின் தொகை பெருக வேண்டும்! அப்பொழுதுதான் இந்த நாடு முன்னேறும்!

எஸ், ஜேசுதாசன்,
கொழும்பு-13.

✶ யு. என். பி. பிழைத்திருக்க வேண்டுமானால் டட்லிசேனநாயக்கா என்ன செய்யவேண்டும்,



கட்சிப் பொறுப்பு முழுவதையும் ஜே. ஆர். ஜயவர்த்தனவிடம் கொடுத்துவிட்டு அரசியல் சந்நியாசம் பூணவேண்டும்!

எஸ்; சபாரத்தினம், மட்டக்களப்பு.

✶ சுதந்திர மனிதன் என்பவன் யார்?

பய உணர்ச்சி இல்லாத மனிதனே சுதந்திர மனிதன்!

ந வில்வேந்திரராசா, யாழ்ப்பாணம்,

✯ திருமணம் என்றால் என்ன?

தற்கொலைக்கு இன்னொரு பெயர்.

ஸ்ரீதேவி, சுன்னாகம்;

✯ இளவயதுடைய ஒரு ஆணும் பெண்ணும் அதிகமாகப் பழகினால் காதல் உண்டாகுமா?

காதல் உண்டாகுமா இல்லையா என்பதைச் சொல்லமுடியாது. ஆனால், நிச்சயமாக குழந்தை உண்டாகும்!

வெ. பாஸ்கரதாஸ், பேராதனை

✯ நாம் எப்போது சிந்திக்கிறோம்;

விஷயம் முடிந்தபின்னர்!

தமிழ்மாறன், யாழ்ப்பாணம்:

✯ தமிழ் காங்கிரஸ் மீண்டும் மக்கள் மத்தியில் புகழ்பெற வழியுண்டா?



தகுந்த கொள்கைகளையும் சரியான நடைமுறைகளையும், பொருத்தமான மாற்றுத்திட்டங்களையும் மக்கள் முன் சமர்ப்பிக்காத எந்தக் கட்சியுமே மக்களிடத்தில் செல்வாக்குடன் விளங்க முடியாது! இந்த விஷயத்தில் தமிழ் காங்கிரசின் நடவடிக்கைகள் எப்படி இருக்கின்றன என்பது நான் சொல்லியா தெரியவேண்டும்!

க. செந்தில்நாதன், மாத்தளை.

✯ எழுத்தாளனுக்கும் அரசியல்வாதிக்குமுள்ள வித்தியாசம் என்ன ?

மக்களைச் சிந்திக்க வைப்பவன் எழுத்தாளன் ! சிந்திக்கத் தெரியாத மக்களின் உணர்ச்சிகளைப் பயன்படுத்தி தன்னை உயர்த்திக் கொள்பவன் அரசியல்வாதி !

க. நடராசா, குருநாகல்

✯ அமெரிக்கர்கள் எப்படி வாழ்கிறார்கள் ?

வருடத்துக்கு ஒரு தடவை தங்கள் மோட்டார் காரை மாற்றுகிறார்கள். மூன்று வருடத்துக்கு ஒரு தடவை தங்களது உத்தியோகத்தை மாற்றுகிறார்கள். ஐந்து வருடத்துக்கு ஒரு தடவை தங்களது மனைவியை மாற்றுகிறார்கள்! சாகும்போது மனதில் நிம்மதியில்லாமல் சஞ்சலத்தோடு சாகிறார்கள்! பெரும்பாலான அமெரிக்க மக்களின் வாழ்க்கை இப்படித்தான் போகிறது! பணம் மட்டும் இருந்துவிட்டால் வாழ்வு உயர்ந்துவிடும் என்று நினைப்பது தவறு !

மு சிவஞானி, கோப்பாய்.

★ உலகத்தில் மிகவும் மதிக்கப்படும் புத்தகம் எது?

'செக்' புத்தகம்!

எஸ். எஸ்; மூளாய்

★ சிலர் தமது கடிதத் தலைப்புக்களில் தாம் பெற்ற படங்களையும், தங்களது பதவிகளையும் போட்டுக் காட்டுவது எதற்காக?

மற்றவர்களுடைய பார்வையில் தெரிகின்ற மாதிரி தாங்கள், அவ்வளவு முட்டாள்கள் அல்ல என்பதைக் காட்டுவதற்காக!

சி. இ. மகேந்திரன், குமுதபவனம், அல்வாய் தெற்கு, அல்வாய். (பரிசு பெறும் கேள்வி)

★ தமிழர் தம் பண்புகள் யாவை?

கொழும்புக் கோட்டை ஸ்டேசனில் அழகாக கியூவில் நின்று பயணச் சீட்டுப் பெற்ற தமிழன், யாழ்தேவியில் யாழ்ப்பாணம் ஸ்டேசனில் வந்து இறங்கியவுடன் பஸ்ஸில் இடம்பிடிப்பதற்காக நடந்துகொள்ளும் முறையைப் பார்த்தால் தமிழர்தம் பண்புகள் எவை என்பது தெளிவாக விளங்கிவிடும்.


மா. சபாரத்தினம், கொடிகாமம்

★ 'வெள்ளி' வெள்ளிக்கிழமைதோறும் வெளிவரவேண்டிய வார இதழ்தானே! ஏன் திங்கள் தோறும் வெளிவருகிறது?

வார இதழாக வெளியிடப்படும் நோக்கத்துடன்தான் 'வெள்ளி' தொடங்கப்பட்டு இருக்கிறது வெகு விரைவிலேயே உமது ஆசை நிறைவேறும். இளைஞர்கள் மத்தியில் பெருகி வரும் ஆதரவைப் பார்த்தால் திட்டமிட்ட காலத்திற்கு முன்னரே வெள்ளி வார இதழாக மாறினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

செ. ராமலிங்கம், நல்லூர்.

★ மறைந்த தலைவர் இரும்பு மனிதன் நாகநாதன் சொர்க்கத்துக்குப் போனதும்......



அறிஞர் அண்ணா ஓடோடி வந்து அவரை வரவேற்றிப்பார்! தமிழர்கள் தன்மானத்துடன் வாழ்வதற்கான நிலைமை சொர்க்கத்தில் சீராக இருக்கின்றதா என்று இருவருமாக ஆராய்ந்திருப்பார்கள்! தமிழர் முன்னேற்றத்திற்கான கழகம் ஒன்றை இருவருமாகச் சேர்ந்து நிறுவியிருப்பார்கள்!

கா. யோகேஸ்வரி, கொழும்பு 13.

★ ஈழத் தமிழரின் எதிர்காலம் எப்படி இருக்கும்?

ஒளிமயமானதாக இருக்கும். ஏனென்றால் தமிழ்ப்பகுதியிலுள்ள பல கிராமங்களுக்கு இப்போது மின்சாரம் கிடைத்து இருக்கிறது; தீவுப்பகுதிக்குக் கூட மின்சாரம் கிடைத்து விட்டது. மின்சாரம் வந்தால் ஒளி பிறக்கவேண்டியதுதானே!

பொ. விஜயேந்திரன், பருத்தித் துறை.

★ மந்திரியாகக்கூடிய வாய்ப்பு தமிழ் எம். பிக்களில் யாருக்காவது இருக்கிறதா?



யாழ்ப்பாணத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் மார்ட்டின் மந்திரியாகலாம்! அரசாங்கத்திலுள்ள பல பெருந் தலைவரின் நெருங்கிய நண்பராக மார்ட்டின் இருக்கிறார்!

ஆர். கிருபாகரன், கண்டி.

★ மனோ நிலைக்கும் உடல் நிலைக்குமிடையில் தொடர்பு உண்டா?

ஆம்! உடல் நலமும் மன மகிழ்ச்சியும் எப்போதும் இணைந்தே இருப்பவையாகும்! நல்லதொரு மனோநிலையும், குதூகலமும், தன்னம்பிக்கையும் சேர்ந்திருக்கும் போதுதான் உடல் நலம் முழுமை பெறுகிறது! மிகு ரத்த அழுத்தம், ஸ்டெனோகார்டியா, மற்றும் இருதயம் ரத்த நாளங்களின் மோசமான வியாதிகள் ஆகியவற்றின் வளர்ச்சியில் உணர்ச்சி வேகமும் மிகப்

---

ஒவ்வொரு இதழிலும்
சிறந்த ஒரு
கேள்விக்கு
ரூ. 5/- பெறுமதியான,
ஈழத்து எழுத்தாளர்
எழுதிய நூல்கள்
பரிசு தரப்படும்

கேள்விகளை
அஞ்சலட்டையில் எழுதி
கீழே உள்ள முகவரியை
வெட்டி ஒட்டி
அனுப்புங்கள்!

கேள்வி – பதில்
'வெள்ளி'
226, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

பெரும் பங்கு வகிக்கின்றது என்பதை அண்மைக்கால ஆராய்ச்சிகள் தெள்ளத்தெளிவாகப் புலப்படுத்தியுள்ளன!
ஜி. பெர்னுண்டோ,
புசல்லாவை.

✣ சமசமாஜக் கட்சிப் பேச்சாளர்களில் சிங்கள மக்கள் மத்தியில் புகழ் பெற்றவர் யார்?



பேச்சாளர் என்ற அம்சத்தை மட்டும் எடுத்துக் கொண்டு பார்த்தால், தோட்டத் தொழில்துறை அமைச்சராகவுள்ள கொல்வின் ஆர். டி. சில்வாதான்! மிகவும் சுவையாக இவர் பேசுவார். இவரது பேச்சில் நிறைய நையாண்டி இருக்கும்; சமசமாஜக் கட்சிக் கூட்டங்களின் போதெல்லாம் இவர்தான் கடைசிப் பேச்சாளராக இருப்பார்! 'ஸ்டார்' பேச்சாளர்கள்தானே கடைசிப் பேச்சாளர்களாக இருப்பது வழக்கம்!


---

✣ நடைமுறையிலுள்ள கல்வித் திட்டம் மாறினுல் மட்டும் போதாது, கல்வித்திட்டத்தை நடைமுறைப் படுத்தும் ஆசிரியர்களின் போக்கிலும் மாற்றம் ஏற்படவேண்டும். எதிலுமே பழையதுதான் சிறந்தது என்ற தவருன மனப்பான்மை சில ஆசிரியர்களிடம் இருக்கிறது. ஒரு சோஷலிஸ கல்வித் திட்டத்துக்கு ஆசிரியர்களின் இத்தகைய மனப்பான்மைதான் மிகப் பெரியதடையாக இருக்கும்! சோஷலிஸ்டுக்கள் இந்தத் தடையை உடைக்கும் பணியில் முனைந்து ஈடுபடவேண்டும்!

✣ சிங்கப்பூர், மலாயாவிலுள்ள தமிழர்கள் தைப்பூச விழாவைப் பெரு விழாவாகக் கொண்டாடுகிருர்கள்: தீபாவளியையொத்தசிறந்த பண்டிகையாக தைப்பூசமும் அங்கு இருக்கிறது.

✣ உலகமெங்கும் எறும்புகளில் சுமார் 20,000 வகைகள் இருக்கின்றன என்று அமெரிக்க விஞ்ஞானி டாக்டர் வில்லியம் பிரவுண் கூறியிருக்கிருர்: இவர் கடந்த 35 ஆண்டுகளாக எறும்புகளைப்பற்றி ஆராய்ச்சி நடத்தி வருகிருர்.

✣ தமிழ்நாட்டு சினிமா நட்சத்திரங்கள் படப்பிடிப்புக்கு செல்லும்போது தாங்கள் இடைவேளைகளில் அமருவதற்கென்று ஃபோல்டிங் நாற்காலி ஒன்றையும் கூடவே கொண்டு போகிருர்கள்! ஆனுல் ஹாலிவூட் நடிகை ஒருவரோ தான் வளர்த்துவரும் நாய் அமருவதற்கென்றே பிரத்தியேகமான நாற்காலி ஒன்றையும் தன்னேடு கொண்டு செல்லுகிருர்! சில இடங்களில் சில மனிதர்களைக் காட்டிலும் சில நாய்கள் யோகசாலிகளாக இருக்கின்றன!



✣ இளம் நடிகர் சிவகுமார் ஓவியங்கள் வரைவதில் வல்லவர். ''சினிமாவில் நடிப்பது தொழில், ஓவியம் வரைவது எனது பொழுதுபோக்கு'' என்று சொல்லும் இந்த நடிகர், ஓவியப் பள்ளியில் படித்து முறையாக ஓவியம் கற்றவர்! கலியாணமாகாத இந்த இளம் நடிகரை தமது வலையில் போட்டுக்கொள்ள முயன்ற நடிகையர் பலர்! ஆனால் இவரோ ''நான் எந்த நடிகையையுமே திருமணம் செய்யமாட்டேன்'' என்று மிகவும் கண்டிப்பாகச் சொல்லியிருக்கிறார்!


✣ சில பாடாவதி விஷயங்களை இழுத்துப் பிடித்து தூக்கி நிறுத்த முற்படுவதில் மன்னன் முன்னைநாள் வவனியாத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் சுந்தரலிங்கம்! அரசாங்கம் செனட்சபை ஒழிப்பு மசோதாவைக் கொண்டுவந்தது சட்டப்படி செல்லாதென்று கூறி உயர் நீதி மன்றத்தில் இவர் ஒரு வழக்குத் தாக்கல் செய்தார்! இவரது வாதங்களைக் கேட்ட பின்னர் இவரது மனுவை நிராகரித்தது உயர் நீதிமன்றம்! எதையாவது செய்து எப்பொழுதும் மக்கள் மத்தியில் தனது பெயர் அடிபடும்படியாகப் பார்த்துக்கொள்வது இவரது வழக்கமாகிவிட்டது.

✣ நட்புக்குரிய பண்புகள் சிதறிப் போக, அனுதாபப்படும் குணம் குறைய, பேராசை ஓங்க, நீதி நியதிகள் அமுக்கப்பட, வெறுப்பும் உதாசீனமும் அகம்பாவமும் அற்பத்தனமும் மட்டரகமான நடவடிக்கைகளும் பேச்சுக்களும் வளர்ந்துவர, இந்த உலகம் கெட்டுப்போய்க் கொண்டிருக்கிறதே என்று யோசிக்கிறோம். ஆனால், பிறரைப்பற்றிச் சிந்திக்காமல் நம்மை நாமே திருத்திக்கொள்வது எப்படி என்று ஒரு சிலராவது யோசிக்கத் தொடங்கிவிட்டோமேயானால் இந்த உலகம் எவ்வளவோ இன்பம் நிறைந்ததாக மாறிவிடும்.

✣ எம். ஜி. ஆரின் ஜோடி ஜெயலலிதாதான் என்ற நிலைமை தமிழ் சினிமா உலகில் மாறிக்கொண்டு வருகிறது! எப்படி இந்த நிலைமை ஏற்பட்டதும் சரோஜாதேவி திடீரெனத் திருமணம் செய்துகொண்டாரோ, அதேபோல ஜெயலலிதாவும் செய்து கொள்ள வேண்டியதுதான்! எம். ஜி. ஆரினால் ஒதுக்கப்பட்டவர்களின் மார்க்கெட் திடீரெனச் சரிவதுதான் வழக்கம்! ஜெயலலிதா மட்டும் இதற்கு விதிவிலக்காக இருக்க முடியாது!

✣ பிரிட்டனுக்கு இன்றைக்கு இருக்கக்கூடிய முக்கியமான பிரச்சினை, ஐரோப்பிய நாடுகளுடன் எந்த முறையில் தொடர்பு கொள்ளுவது என்பதுதான். ஐரோப்பாவில் உள்ள பல நாடுகள் பொருளாதார அடிப்படையில் இணைந்து ஒன்றுபட்டுச் செயலாற்றவேண்டும் என்ற ஓர் இயக்கம் செயல்பட்டு வருகிறது. அந்த அடிப்படையில் ஒரு சில நாடுகள் தங்களுக்குள் நடைபெறும் வர்த்தகத்திற்கு வரிச் சலுகைகள் ஏற்படுத்திக் கொண்டுள்ளன. இந்த ஏற்பாட்டில் பிரிட்டனும் சேர்ந்து இருக்கிறது. இன்னும் சில நாடுகள் ஒன்றாக இணைந்து எந்தவிதமான கட்டுப்பாடும் இல்லாமல் தமக்குள் வியாபாரம் செய்யக்கூடிய கொள்கையைக் கடைப்பிடித்து வருகின்றன. பிரிட்டனும் அந்த கோஷ்டியில் சேரலாமா வேண்டாமா என்பது பற்றிய கருத்து வேறுபாடுகள் பிரிட்டிஸ் மக்களிடம் இருந்து வருகின்றன. மற்ற நாடுகளிலும் பிரிட்டனைச் சேர்த்துக்கொள்ளலாமா, வேண்டாமா என்பதில் கருத்து வேற்றுமை இருக்கிறது.

✣ இங்கிலாந்து நாட்டு மக்களிடம் தினமும் குளிக்கும் பழக்கம் கிடையாது. தினமும் குளித்தால் ஜலதோஷம் பிடித்துக்கொள்ளும் என்ற தவறான எண்ணம் அந்த நாட்டு மக்களிடம் பரவி இருக்கிறது. யாராவது ஒரு தமிழர் அவர்களிடம் ''நான் தினமும் குளிக்கிறேன், என் உடல் பாதிக்கப்படவில்லை'' என்று சொன்னால், அதைக்கேட்டு ஆச்சரியப்படுகிறார்கள்:



✣ எம். ஜி. ஆர். தான் நடிக்கும் படங்களில் வெறுமனே நடிப்பில் மட்டும் பங்குபற்றுவதோடு நின்று விடுவது கிடையாது! கதை, வசனம், டைரக்‌ஷன், ஒளியமைப்பு ஆகிய எல்லா விஷயங்களிலுமே தலையிட்டு தனது ஆலோசனைகளைச் சொல்லுகிறார்! இவரது ஆலோசனைகளைக் கட்டளைகளாக எடுத்துக்கொண்டு அப்படியே நிறைவேற்றி வைக்கிறார்கள் படத் தயாரிப்பில் ஈடுபடுவோர்! எதைச் சொன்னாலும் சரியாகச் சொல்லும் திறமை எம். ஜி. ஆரிடம் இருப்பதாக இவர்கள் நம்புகிறார்கள்!

✣ My Fair Lady படத்தில் பேராசிரியராக நடித்த ரெக்ஸ் ஹாரிஸன் என்ற நடிகர் நான்கு தடவைகள் திருமணம் செய்து விவாகரத்துச் செய்தவர். இப்போது ஐந்தாவது மனைவியைத் தேடிக்கொண்டு இருக்கிறார். இவருக்கு வயதாகிக்கொண்டு வருகிறது! இருந்தாலும் பல இளம் பெண்கள் இவரை மணக்க விருப்பம் தெருவித்து இருக்கிறார்கள்! காரணம் என்ன?—பணம்!

# பரிசுக் கட்டுரை

'ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்' எழுதிய

செத்தை வேலிகளுக்கப் பால் சிதம்பிச் சீரழிந்துகொண்டிருக்கும் ஒரு சமூகத்தையே விழுங்கி ஏப்பம் விட்டுக்கொண்டிருக்கும் 'சீதனம்' அதன் வக்கரித்த விளைவுகளைச் சிறப்பாகச் சிறுகதை ஒன்றில் அடக்கிக்காண்பித்து விட்டமையால், புதிய தலைமுறையினரான ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தை நம்பிக்கைக்குரிய நல்லதொரு எழுத்தாளராக நாமும் இனங்கண்டு கொள்கிறோம். ஒருபுதிய, அதுவும் பெண் எழுத்தாளரின் பேனா சீதனக் கொடுமையைச் சாடி எழுகின்ற வேகத்தைக் காணும்போது எமக்கேற்படுவது வியப்பும், சிலிர்ப்பும்தான்.

'மங்கையராய்ப் பிறந்திடில்
மா சீதனம்
சேர்த்திட வேண்டுமம்மா'
— எனத் தனக்குள்

பாடி வேதனையுடன் சிரித்துக்கொள்ளும் முப்பது வயது கடந்த 'கிழட்டுக் குமர்' இந்திரா, கொழும்பில் நர்ஸாக வேலை செய்யும் அவள் தங்கை ராணி, அந்த வீட்டுப் பெரிய ஆண்பிள்ளையான — பல்கலைக் கழகப் புகுமுகப் பரீட்சை முடிவுக்காகக் காத்திருக்கும் தம்பி சிவசம்பு. 'இருட்டியபின் வீட்டுக்கு வரும் ஒரு செம்மண் சிலையான தகப்பன்: அச்சமூகத்தின் பழைய சம்பிரதாய வேலிக்குள் தன்னைச் சிறைப்படுத்திக்கொண்டு போராடி மாயும் ஒரு தாய் - இவை தாம் 'சீதன' பாத்திரங்கள்;

'ஸ்டான்டர்டான' மாப்பிளை கிடைக்காமல் முப்பது வயது வரை காலத்தையோட்டிவிட்டு, 'என்ன சனியனோ... நீயும் துலையிறாய் இல்லை எங்களுக்கும் நிம்மதியில்லை' என்று நாளாந்தம் தாயிடம் வசவு வாங்கிக் கட்டும் இந்திரா, எவ்வளவு பரிதாபத்திற்குரிய ஒருபாத்திரம்? 'கட்டிக் கொடுக்க வக்கில்லாமல் ஏன் பெத்தினமாம்' என மனதிற்குள் மறுகும் அவளே தன்னால் தன் தங்கைமாரின் திருமணங்களும் கூடத் தடைப்படுகின்றனவோ என்றும் வேதனைப்படுகிறாள். பதினைந்து வருடங்களுக்கு முன்னால் படிக்கும்போது சகமாணவன் ஒருவனைக் காதல்கடிதமெழுதவைக்குமளவுக்கு அவளும் அழகியாகத்தான் இருந்தாள். ஆனால் இப்போது தன்னோடொத்த வயதுப் பெண்கள் புருஷன் பிள்ளைகளுடன் வரும்போது தானறியாத் தவிப்பில் துடித்துப் போய் விடுவோமே' என்று கோவில் குளமெல்லாவற்றையும் கனவுலகக் காட்சிகளாக விலக்கிவாழ்பவளாக மாறிவிட்

## 'வெள்ளி' கட்டுரைப்போட்டிய

கி. ப: வேதநாயகம்
178, ஸ்ரீகுணானந்த ம

ஈழத்து எழுத்தாளர்களின் படைப்
வத்துடன் மிகவும் உன்னிப்பாக வாசி
ரைப்போட்டிக்கு வந்து சேர்ந்த கட்டுரை

'தினகரன்' வாரமஞ்சரி (14-10-7
யத்திஞல் எழுதப்பட்ட ''சீதனம்'' எ
காலப் பகுதியில், ஈழத்தில் படைக்கப்ப
அதனை விமரிசிக்கின்றார் கொழும்பைச்
1945ம் ஆண்டு நவம்பர் மாதம் கரம்ப

இவரது கட்டுரையே பரிசுக்குரியத

'ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்' எழுதிய

# 'சீதனம்' — சிறுகதையின் திறனாய்வு

டாள். அப்படி அவளை மாற்றி வைத்ததுஎது? 'விரும்பியா விரதம் இருக்கிறன். யாரையெண்டாலும் கொண்டுவா கட்டுறன்" என மனதிற்குள் அழுகிறாளே இந்திரா. அவளா அழவேண்டியவள்? சீதனக் கொடுமையால் செல்வரித்துப்போன இந்தச் சமூகத்தில் பிறந்து விட்டதற்காக, அக்கொடுமையைக் களைய மார்க்கம் காணாமல் வாழாவிருக்கிறோமே -நாமல்லவா அழவேண்டியவர்கள். இந்திராவின் பாத்திரம் நம் மனதில் எழுப்பும் சிந்தனைகளும் சலனங்களும் கதாசிரியையின் வெற்றியை உறுதிப்படுத்தும் சான்றுகள்.

எல்லாமே தலைவிதியென்று நம்பி நசிந்துகொண்டிருக்கும் அச்சமூகத்தின் புதுமைப்பெண் தான் ராணி. தமக்கைக்குத் திருமணமாகாத காரணத்தை உணர்ந்து தனது பிரச்சினைகளுக்குத் தானே தீர்வு காணும் துணிச்சலும் கெட்டித்தனமும் கொண்டு தனது வாழ்க்கைத் துணையைத் தானே தெரிந்தெடு

## 'மறை முதல்வன்'

த்துக்கொள்ளும் அவள் காத[...] லிப்பதோ வேறு சாதியானொரு[...] வனை. அச்சாதிபேதம் தன்னைப் [...] பாதிக்குமோ என அவள் அஞ்ச[...] வில்லை. ஆனால், தமக்கைக்கு[...] வரப்போகும் நல்வாழ்வை அது [...] தாக்கிவிடக்கூடாதே என்று [...] தான் அவள் ஆதங்கப்படுகி[...] றாள்.

"நான் உனக்கு முதல் கலி[...] யாணம் செய்யிறதைப்பற்றிப் [...] பயப்பிடலை. ஆனால் பேந்து உன[...] க்குக் கலியாணமாகாது. அது[...] தான் நீ முதலில் கலியாணம் [...] செய்தா பேந்து நான் பேசா[...] மச் செய்துவிடுவேன்"

சமூகத்தின் குறைபாடுக[...] ளுள் ஒன்றான சாதிப் பிரிவினை [...] இவ்விடத்தில் 'சாடையாகத்' [...] தலைநீட்டுகின்றது. கதாசிரியை [...] அதற்கும் அழுத்தம் கொடுக்க [...] முயன்றிருந்தால் அவ்வளவு[...] தான் அத்துடன் அவர் 'குளோ[...] ஸ்'! தானெடுத்துக்கொண்ட கரு[...] ப்பொருளைச் செவ்வனே சொல்[...] லமுடியாமல் 'அந்தரித்திருப்' [...] பார்.' ஆனால் 'இப்படியும் ஒரு [...] தடை இருக்கிறது! என்பதை [...] மட்டும் பட்டும் படாமலும் [...] தொட்டுக் காட்டி விட்டு நாசுக்[...] காக நழுவி விடுவதன் மூலம் [...] நூலிழையில் நடக்கும் 'சர்க்கஸ்[...] காரனை' நிகர்க்கின்றார். மிகப் [...] பெரிய எழுத்தாளர்களே சறுக்கி [...] விழுந்துவிடும் இத்தகைய சந்[...] தர்ப்பத்தில் சாமர்த்தியமாகத் [...] தப்பிவிடும் இவரது திறமை [...] வியக்க வைக்கின்றது;

[...]ாட்டியில் ரூபா. 200 பரிசு பெறுகிறார்.

[...]நாயகம் (மறை முதல்வன்)

[...]ந்தர மாவத்தை கொழும்பு-13;

[...]படைப்புக்களை நமது இளைஞர்கள் எவ்வளவு ஆர்[...] [...] வாசித்து வருகிறார்கள் என்பதற்கு இக் கட்டு[...] [...]கட்டுரைகள் நல்ல சான்றாக இருந்தன !

[...]4-10-70) இதழில் ராஜேஸ்வரி பாலசுப்பிரமணி[...] [...]ம்" என்ற சிறுகதையே, நாம் குறிப்பிட்டிருந்த [...]டக்கப்பட்ட மிகச் சிறந்த படைப்பு என்று கூறி [...]ம்பைச் சேர்ந்த இளைஞர் திரு. கி. ப. வேதநாயகம் [...] கரம்பனில் பிறந்தவர் இவர்!


[...]க்குரியதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது:

— ஆசிரியர்.

கதையில், இந்திராவின் பாத்திரத்தை வலுப்படுத்தவே பிற பாத்திரங்கள் யாவும் அறிமுகப் படுத்தப்படுகின்றன. இந்திராவைப் போன்ற பெண்களை "வாழ" வைப்பதற்காக, ராணியைப் படைத்து, வாழும் வழியைக் காட்டியிருக்கிறார் ஆசிரியை. கதை பின்னிச்செல்லும் பிரச்சினைக்கான மறைமுகமான தீர்வும் கதையிலேயே கோடி காட்டப்பட்டு விடுகிறது; யாழ்ப்பாணத்தில் வந்து நிற்கிற காலம்வரைதான் கதையில் ராணி உலவுகின்றாள். அப்பால் அவளைப்பற்றிய கதையில்லை பிறபாத்திரங்களும் அவ்வாறே. தேவைக்கதிகமாகத் தலையை நீட்டாமல் ஒதுங்கிக் கொள்கின்றன. பாத்திரங்களின் இயக்கங்களை அளவோடு கட்டுப்படுத்தியுள்ள முறையிலும் மேதை தெரிகிறது.

பூர்வ புண்ணியமாக, 'பியூப்பிள் டீச்சராக' எடுபடும் இந்திரா, புதிய சூழ்நிலையில் பழகப் போகிறாள். அங்கே, 'கிழட்டுக் குமர்' இவள் மட்டுமல்ல. இன்னும் இரண்டொரு கிழட்டுக் குமர்களுமல்ல, கிழட்டு வாலிபர்களும் இருக்கிறார்கள். அவர்கள் பாவம் எந்தத் தமக்கைக்கு அல்லது தங்கச்சிக்குத் தம் ஆசைகளை நரைதிரை மூப்பாக்குகிறார்களோ?

எந்த ஒரு பாத்திரத்திற்கும் வழக்கறிஞராகத் தன்னை நியமித்துக்கொண்டு வலிந்து தன் கட்சியை நிலைநிறுத்த முயலாமல், இயல்பாக இந்திராவின் மனவோட்டமாகவே தனது கருத்தைப் பதித்து விடுகின்றாரே ஆசிரியை, அதனாலேயே கதைக்கு நிறைவான ஒரு கலை வடிவம் கிடைத்து விடுகின்றது. புதிய சூழ்நிலையில் ஆண்களுடன் பழகும்போது, அமுக்கப்பட்ட



✣ பேராசிரியர் வித்தியானந்தனின் 25 ஆண்டுப் பல்கலைக் கழகச் சேவையைக் குறித்து நுணுவில் தமிழ் மன்றத்தார் கடந்த மாதப் அவருக்கு ஒரு பாராட்டு விழாவைச் சிறப்பாக நடத்தினார்கள். பாமரக் கலையான நாட்டுக் கூத்தை பல்கலைக் கழக அந்தஸ்துக்கு உயர்த்தி வைத்திருப்பவர் வித்தியானந்தன்தான்! அன்று பேசியவர்கள் எல்லோருமே இதைத் திரும்பத் திரும்பச் சொன்னார்கள். யாழ். உதவி அரசாங்க அதிபர் முருகேசம்பிள்ளை பேசும்போது 'பேராசிரியர் இந்த நாட்டுக்கூத்துப் பணியோடுமட்டும் நின்றுவிடாமல் தமிழினத்தின் பெருமையை விளக்கும் சரித்திர ஆராய்ச்சிகளையும் செய்யவேண்டும்' என்று கேட்டுக்கொண்டார்; மிக நல்ல யோசனை!

அவளது இளமை உணர்வுகள் மீண்டும் பீறிட்டுக் கிளம்புவதை எவ்வளவு இயல்பாக வடித்திருக்கிறார்.

'இப்போதெல்லாம் இந்திரா அடிக்கடி பெருமூச்சு விடுகிறாள். இரவில் தலையணையைக் கட்டிப்பிடித்துக்கொண்டு தூக்கமில்லாமல் தவிக்கிறாள். அதன் பிரதிபலிப்பு அடுத்தநாள் கிழட்டு வாலிபர்களுடன் தாராளமாகக் கதைக்கிறாள். எப்போது கல்யாணம் நடக்கும்? இப்போதெல்லாம் என்னமாதிரி 'ஸ்டைல்' செய்கிறாள்! யாரும் காதலிக்க மாட்டார்களா?'

'ஆனாலும் என்னவோ ஒரு துடிப்பு. ஒரு தவிப்பு ராணியைப்போல் நானும் தனியாகப் படத்துக்குப் போய்—'

பெண் பார்க்க வந்தவர்களின் பேச்சு சீதன விஷயத்தில் அதுக்கு இதுக்கென்று நீள நீள, இந்திராவின் மனக்கோட்டைகள் யாவும் சரிந்து தரைமட்டமாகின்றன. ஏன் 'கலியாண வீட்டுக்குப் பட்டாசு வெடிக்கச் சீதனம் வேண்டாமோ' எனப் படபடத்துப் பொரிகிறாளே, அந்தக் குமுறலுடன் அவள் மாறி விடுகிறாள். அவளது மாற்றத்திற்கான காரணிகளை படிப்படியாக, அழகாக வளர்த்துக் கொண்டு வந்தமையால் அதை நாமும் சரியென ஏற்றுக்கொள்ள வைத்து விடுகிறார். 'டசின் கணக்கான 'அவைக்குத்' தரிசனங் கொடுத்து ஏற்பட்ட ஏமாற்றம் ராணியின் நடவடிக்கை விளைவித்த மனப்போராட்டம், பியூப்பிள் டீச்சராகத் தன்காலில் நிற்பதால் உண்டான தைரியம், காலச் சுவடுகள் அவளிடம் பதித்துவிட்ட கசப்பான அனுபவங்கள் - எல்லாமாகச் சேர்ந்து அவளை மாற்றி விடுகின்றன.

அம்மாற்றத்தின் பின் 'இச் சமுதாய அமைப்பே அடியோடு

---

✣ முன்னரெல்லாம் எழுத்தாளர்கள் சினிமாத்துறைக்குள் நுழையும்போது கதை, வசன ஆசிரியர்களாகத்தான் நுழைவார்கள். இப்போதோவென்



றால் தயாரிப்பாளர்களாக நுழையத் தொடங்கியிருக்கிறார்கள். 'ஆனந்த விகடன்' மணியனும், 'கல்கண்டு' தமிழ்வாணனும் இப்போது திரைப்படத் தயாரிப்பாளர்களாக மாறியிருக்கிறார்கள். இருவருமே தனித்தனியாக ஒவ்வொரு தமிழ்ப் படத்தை தயாரித்துக்கொண்டு இருக்கிறார்கள். எழுத்துத்துறையில் இவர்களுக்குக் கிடைத்த வெற்றி திரைப்படத் தயாரிப்புத் துறையில் கிடைக்குமா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

மாறிப் பணத்தின் மதிப்பு அழிந்து, விரும்பிய வாழ்க்கையையே விரும்பியபடி பெறும்' காலம் வாராதா என ஒருபோது ஏங்கிய இந்திரா, சமுதாய அமைப்பையே பழிவாங்குபவள்போல நடந்துகொள்கிறுள். ஆண்பெண் வித்தியாசமின்றித் தன்னோடொத்தவர்களுடன் அவள் பேசிச் சிரிக்கிறுள். 'ஊர்வாய் மூடவில்லை, திறந்த வாயில் அவளை மென்றுகொண்டிருக்கிறது' 'எது எவரெவரால் கட்டிக்காக்கப்பட்டதோ, சம்பிரதாயம், ஒழுங்கு என்ற பெயரில் - அந்த ஒழுங்கு ஒன்றும் அவளுக்குத் தேவையில்லையாம்' என்று மூன்ரும் ஆளாக நின்று கொண்டு ஆசிரியை கதையை முடிக்கிருர். படாரென்று முகத்தில் அறைந்தாற்போன்ற, எவ்வளவு வேகமான (forcible) தாக்கமான முடிவு!

சிறுகதை என்பது வாழ்க்கையின் சாளரம். அந்தச் சாளரத்திற்கூடாக ஒரு சமூகத்தின் முழுப் பின்னணியையுமே காட்ட முடிவது அற்புதமான சாதனை. ஒரு சமூகத்தினது எல்லா இயல்புகளையும், ஒரு சிறுகதைக்குள்ளேயே மடக்கி ஒரு பாத்திரத்தின் வளர்ச்சியாலும், மன அவசங்களாலுமே சொல்லி முடித்து விடுவதென்பதென்ன சாமானியமான செயலா ?

தனது உருவ அளவு பாட்டால், குறிப்பிட்ட சில உணர்ச்சிகளையும், நிகழ்ச்சிகளையும் ஏந்த முடியாத சிரமமுள்ளது சிறுகதை. ஆனுல் 'சீதன'த்தில் தன்னுல் ஏற்க முடிந்தளவு நிறைவாகவே அது ஏந்திக் கொள்கிறது.


திடீர்த் தோற்றம், மூச்சு விடாத ஓட்டம், பட்டெனும் முடிவு என்ற சிறுகதையின் அமைப்பு இலக்கணங்களை மீருமல், அதே வேளை அவ்விலக்கணங்களுக்குள் அடங்கிவிட வேண்டுமே என்ற நிர்ப்பந்தத்தில் சிரமப்பட்டு வளைக்கப்படாமல், கதைக்கென்று புகுத்தப்பட்டு முன் நீட்டிக்கொள்ளும் செயற்கைத் தன்மையோ, பிரசாரத்தன்மையோ, எங்கேயும் தலை நீட்டாமல், காலம், இடம், நிகழ்ச்சியில் ஒருமைப்பாடு கொண்டு, உணர்ச்சியிலோ, சுவையிலோ பேதம் காட்டாமல், எதார்த்த நிலைகளைச் சிறப்பாகச் சித்தரித்து, எடுத்துக் கொண்ட பொருளை - சீதனக் கொடுமையை-படிப்போர் நெஞ்சில் அழுத்தமாகப் பதித்துச் சுவையான ஒரு கலையனுபவமாகவும், வாழ்வின் பிரதிபலிப்பாகவுந் திகழும், 'சீதனம்' ஈழத்து எழுத்துலகு பெற்று விட்ட சிறந்த சீதனமென்ருல்அது பொய்யாகாது.

---

சிகரெட் புகைப்பவர்களுக்கு புற்றுநோய் வரும் ஆபத்து நிச்சயம் என்பது ஆராய்ச்சி மூலம் உறுதியாகி விட்டது. புகை பிடிப்பவர்களே, கவனமாக நடந்துகொள்ளுங்கள்! நீங்கள் புகைக்கும் ஒவ்வொரு சிகரெட்டும் உங்கள் ஆயுளைக் குறைக்கிறது என்பதை நினைவில் வைத்திருங்கள்.

✣ சிங்கப்பூரில் மந்திரியாக இருக்கும் தமிழர் ராஜரத்தினம் என்பவர்! இவரது நெருங்கிய உறவினர்கள் பலர் இன்னமும் இலங்கையில்தான் இருக்கிறார்கள்! ''பின் தங்கிய நாடுகள் முன்னேற்றமடைய வேண்டுமானால், பல்வேறு சமூகங்களுக்கிடையுள்ள குறுகிய மனப்பான்மை முற்றாக ஒழிக்கப்பட வேண்டும்'' என்று இவர் சமீபத்தில் பேசியிருக்கிறார். சிங்கப்பூர் பிரமாதமான முறையில் முன்னேறி இருப்பதற்குக் காரணம் குறுகிய மனப்பான்மை இல்லாத முறையில் அங்குள்ள மக்களின் வாழ்க்கைமுறை அமைந்திருப்பதுதான்!

✣ புதிய பத்திரிகைகள் பல தோன்றுகின்றன. இவற்றுள் ஒரு சில மாத்திரம் மக்கள் ஆதரவைப் பெற்று நிலைத்திருக்க ஏனையவை மறைந்து விடுகின்றன. நிலைத்திருப்பவை எல்லாம் நல்லவை என்றும் தீர்மானிக்க முடியாது. இலக்கிய வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க பணிபுரிந்த கலாநிலையம், விவேக போதினி, பாலபாரதி, பஞ்சாமிர்தம், மணிக்கொடி, சக்தி, சரஸ்வதி, ஈழகேசரி, மறுமலர்ச்சி என்பனவும், சுதந்திர உணர்ச்சியூட்டிய லோகோபகாரி, தமிழ்நாடு, நவசக்தி, சுதந்திரச் சங்கு, ஊழியன், இந்துஸ்தான் முதலியனவும் இருந்த இடமும் தெரியாமல் மறைந்துபோயின. இவைகளுள் பல பத்திரிகைகள் மறைந்ததற்கு வேறும் காரணங்கள் இருந்தாலும் முக்கியமான காரணம் பொருளாதார நெருக்கடியே!



✣ சிவாஜி நடித்த தமிழ்ப் படங்கள் இந்தியில் தயாரிக்கப்படும்போது, அதில் நடிக்கவரும் இந்தி நடிகர்கள், சிவாஜி நடித்த தமிழ்ப் படத்தைப் போட்டுப் பார்த்துவிட்டு, ''இவரைப் போல நம்மால் நடிக்க முடியுமா?'' என்று பெருமூச்சு விடுகிறார்கள்! சிவாஜியைப்போல நடிக்கக்கூடியவர்கள் இந்திப் படவுலகில் யாருமே கிடையாது என்பது இந்தி நடிகர்களே ஒப்புக்கொண்ட உண்மை!

✣ வளர்ந்து வரும் விஞ்ஞான முன்னேற்றம், நாடு, மொழி, மதம், இனம் என்ற பேதங்களையெல்லாம் வென்று கொண்டு வருகிறது. உலகத்து மக்கள் அனைவரும் நாளுக்கு நாள் உள்ளத்தால் நெருங்கிக் கொண்டு வருகிறார்கள். அரசியல் வாதிகளினாலும், தத்துவ ஞானிகளாலும் சாதிக்க முடியாத காரியத்தை விஞ்ஞான முன்னேற்றம் சாதித்துக் கொண்டு வருகிறது!

✣ சிறிது உயரம் குறைவான தலையணையில் மல்லாந்து படுத்துத் தூங்குவதே மிகச் சிறந்தது என்று டாக்டர்கள் சொல்லுகிறார்கள். இவ்வாறு படுத்தால் இரத்த ஓட்டம் தங்கு தடையின்றி நடைபெறுகிறது. அடிக்கடி தலைவலியால் அவதிப்படுவோர் மல்லாந்து படுத்துத் தூங்குவதே சிறந்தது; இப்படிச் செய்தால் காலையில் புத்துணர்ச்சியுடன் எழுந்திருப்பார்கள். ஆனால், உடல் உழைப்பால் களைத்துப் போனவர்கள் இடது பக்கம் சாய்ந்து படுப்பது நல்லது. வயிற்றுக் கோளாறுகளினால் அவதிப்படுவோரும், தொந்தி விழுந்தவர்களும் குப்புறப் படுக்க வேண்டும். இப்படிச் செய்தால் தொந்தி குறையுமாம்!

✣ உட்கொள்ளும் உணவு பன்னிரண்டு மணித்தியாலத்திலிருந்து இருபத்து நான்கு மணிநேரத்துக்குள் மலமாகி வெளியாகும். உணவு எந்த அளவு உட்கொள்ளுகின்றோமோ அதற்கேற்றவாறே மலமும் அமைகிறது. ஒவ்வொரு நாளும் ஒரு தடவையாவது மலம் வெளியாக வேண்டும். இந்த முறையிலிருந்து வேறுபட்டு இரண்டு நாட்களுக்கு ஒருமுறையோ அல்லது ஒழுங்கீனமற்ற முறையிலோ மலம் கழிந்தால் அந்த நிலை மலச்சிக்கலாகும். பலவகையான விஷங்கள் ரத்தத்தில் சேர்வதற்கு மலச்சிக்கல் வழி செய்கிறது. மலச்சிக்கலால் வயிற்றில் பாரமும், நரம்புகளில் தாக்கமும் ஏற்படுகிறது. பலவகையான பழவகைகளும், பச்சைக் காய்கறிகளும் மலச்சிக்கலுக்கு சிறந்த மருந்தாகும்.

✣ சோவியத் யூனியனில் உள்ள காடுகளில் வசித்து வந்த புலிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் குறைந்து கொண்டு வருவதைக் கண்ட சோவியத் வனபரிபாலன இலாகா நடவடிக்கை எடுத்தது! இப்போது அங்குள்ள புலிகளின் எண்ணிக்கை கூடிக்கொண்டு வருகிறது!

✣ ✣




✣ தூர நாடுகளிலிருந்து கிடைக்கும் செய்திகளை உடனுக்குடன் செய்திப் பத்திரிகை அலுவலகங்களில் தானாகவே 'டைப்' செய்து வைக்கும் யந்திரத்துக்கு 'டெலி பிரிண்டர்' என்றுபெயர் இதைக் கண்டுபிடித்தவர் 'பிரெட்ரிக் கிரீட்' என்பர். 1957-ல் காலமான இவர் தனது வாழ்நாளில் குடித்துப் பழக்கமில்லாதவர். மது மட்டுமல்ல, புகைப்பிடிக்கும் வழக்கமும் இவரிடம் இருந்ததில்லை.

✣ வருமானவரிக் கமிஷனராக இருந்து நீண்ட காலம் சேவையாற்றி ஓய்வு பெற்றுள்ள சிற்றம்பலம் அவர்கள் இப்போது நிதியமைச்சு ஆலோசகர்களுள் ஒருவராகக் கடமையாற்றி வருகிறார்! சோதிடக் கலையில் இவர் ஒரு புலி! தனி மனிதர்களின் எதிர்காலத்தை மட்டுமல்லாது நாட்டின் எதிர்காலத்தையும் சோதிடம் மூலம் ஆராய்வது இவரது பொழுது போக்கு! 1974-ம் ஆண்டுவரைக்கும் இலங்கை பல பிரச்சினைகளைச் சந்தித்துச் சமாளிக்க வேண்டி வருமென்று இவர் சோதிடம் கணித்துச் சொல்லியிருக்கிறார்!

✣ ராஜ்கபூர் தயாரித்த சில படங்களில் தமிழ் நடிகையான வைஜயந்திமாலா முத்தக் காட்சிகளில் நடித்திருக்கிறார்! கீழைத்தேச நாடுகளில் திரையிடப்படும் படங்களில் இந்தக் காட்சிகள் கிடையாது! மேலை நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட திரைப்படப் பிரதிகளில் மட்டும்தான் இந்தக் காட்சிகளைச் சேர்த்திருக்கிறார் ராஜ்கபூர்!

✣ மிகவும் அழகாக ஆங்கிலம் பேசக் கூடிய அமைச்சர்களுள் முதன்மை ஸ்தானம் வகிப்பவர் பொது நிர்வாக, உள்ளூராட்சி அமைச்சர் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா! இவரது தந்தை நீதிபதியாக இருந்தவர்!

✣ சிலபகுதிச் சிங்களவரின் வரவேற்பு அறையிலே வழக்கமான நாற்காலிகளோடு இரண்டொரு சிறிய நாற்காலிகளும் வைக்கப்பட்டிருக்கும். அவற்றுக்கு 'பாஹியாய் புட்டுவ' (அரை ஆசனம்) என்று பெயர். சமூக அந்தஸ்துக் குறைந்தவர்கள் வீட்டுக்கு வந்தால் அந்த நாற்காலியில்தான் உட்கார வேண்டும்.



✣ அமைச்சர் பீட்டர் கெனமன் அரசியலுக்கு வருவதற்கு முன்னால் பத்திரிகைத் துறையில் உழைத்தவர்! 'லேக் ஹவுஸ்' நிறுவனத்தில் வேலை பார்த்தவர்! இவரது சகோதரரும் ஒரு சிறந்த எழுத்தாளர்!



✣ நடிகர் முத்துராமன் நன்றாகக் காற்பந்து விளையாடக் கூடியவர். இப்போதும் வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் எங்காவது காற் பந்துப் போட்டி நடைபெற்றால் தவறாது போய் பார்த்து வருகிறார். காற்பந்து விளையாட்டில் உள்ள ஆசை இன்னமும் இவரை விட்டுப் போகவில்லை !

✣ எம். ஜி. ஆர் பிக்சர்ஸாரின் நிர்வாகியாகவும், எம். ஜி. ஆரை வைத்து பல படங்களைத் தயாரித்துள்ள சத்யா பிலிம்ஸின் உரிமையாளராகவும் உள்ளவர் ஆர். எம். வீரப்பன்! இவருக்கும் நடிகை ஜெயலலிதாவுக்கும் இடையில் பலத்த மன வேறுபாடு ஏற்பட்டு இருக்கிறது! இதன் காரணமாக எம். ஜி. ஆர் - ஜெயலலிதா ஜோடி பிரியப்போகிறது ! இதனால் நஷ்டம் யாருக்கு? ஜெயலலிதாவுக்குத்தான் ! சரோஜா தேவிக்கு நேர்ந்த கதிதான் ஜெயலலிதாவுக்கும் நேரப் போகிறது !

✣ மார்ஜுவானா என்ற போதை பொருளைப் புகைக்கும். பெண்களுக்குப் பிறக்கும்குழந்தைகள் ஊனத்தோடு பிறக்கிறார்கள் எனவும், மார்ஜுவானா புகைக்கும் ஆண்கள் தமது ஆண்தன்மையை விரைவில் இழந்து விடுகிறார்கள் என்றும் அமெரிக்க விஞ்ஞானியான டாக்டர் வெஸ்லி ஹால் கண்டு பிடித்துச் சொல்லியிருக்கிறார். மார்ஜுவானா மட்டுமல்ல, புகைப்பதற்கும், போதைதருவதற்கும் பயன்படும் எல்லாப் பொருட்களுமே ஆபத்தானவைதான்!

✣ எப்போதும் அட்டகாசமாகப் பேசிக்கொண்டு திரிபவர் ஹபராதுவை எம். பி. பிரின்ஸ் குணசேகரா! எதற்கெடுத்தாலும் குடுகுடுக்கும் பழக்கமும் இவரிடம் உண்டு! காலித்தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் தகநாயக்கா, முன்னாள் வவுனியா எம். பி. சுந்தரலிங்கம் ஆகியோரிடமுள்ள சில குணங்கள் இவரிடமும் இருக்கின்றன! ஆளுங் கட்சியினரின் கட்டுக்கோப்புக்கு இணங்கி இவர் நடக்காததால், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தலைமைப் பீடம் இவர் மீது நடவடிக்கை எடுத்துக் கட்சியை விட்டு வெளியேற்ற முன்னரே இவர் எதிர் கட்சிக்குத் தாவி விட்டார்!

✣ திருப்பதி வேங்கடாசலபதி கோயிலுக்கு வருடம் ஒன்றுக்கு ஆறுகோடி ரூபாய்க்கு மேல் வருமானம் வருகிறது. இவ்வளவு வருமானம் உள்ள கோயில் இந்தியாவில் வேறு எதுவுமே இல்லை!



# இவளுக்குத் தெரியாது!

**சுகுமாரன்**

கண்டி:

பேராதனை வீதியில் ஒருபங்களா

பங்களாவின் மாடியில் ஒரு தங்கப்பதுமை.

பதுமையின் பெயர் மீனா,

''பாத்ரூ'' மிலிருந்து வந்து 'பெட்ரூ'மில் நிற்கிறாள்

அலங்காரத்துக்கு ஆயத்தம்.

உடலில் ஒரு 'டவல்', அதுமட்டுமேதான்.

கண்ணாடிக்கு முன் நிற்கிறாள்:

பெரிய கண்ணாடி, பெல்ஜியம் கண்ணாடி, ஆளளவு உயரமுள்ள கண்ணாடி:

இவள் அழகு கண்ணாடியில் தெரிகிறது;

கால்களும், மழமழப்பான தோள்களும்...

திரும்பிப் பார்க்கிறாள்.

கதவு சாத்தியிருக்கிறது.

தனிமை,

அந்தத் தனிமையில் ஒரு இனிமை,

'டவல்' காலடியில் மிதிபடுகிறது;

ஒரு பார்வை.

அந்தப் பார்வையில் ஒரு பரவசம்;

ஒன்று,

இரண்டு,

மூன்று!

மணி 4.00, ஆனால் கடியாரத்தின் மூன்றாவது ஒலியிலேயே இவள் பரபரப்பு அடைகிறாள்.

பரபரப்புக்குக் காரணம் இருக்கிறது.

காரணம் அழகாக, உயரமாக, மீசை வைத்துக்கொண்டு மோட்டார் சைக்கிளில் ஒரு தனி ஸ்டைலில் சுற்றுகிற ஒரு வாலிபனின் வடிவத்தில் இருக்கிறது.

இன்று அந்த வடிவத்தைச் சந்திக்கப் போகிறாள்: சந்தித்துப் பேசப் போகிறாள்: பேசி...

இவளுக்கு அந்த வடிவத்தின்மீது இப்படி ஒரு கிறக்கம் ஏற்பட்டது எப்போதிருந்து?

கடந்த ஒரு மாத காலமாக இவளைச் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருக்கிறான் அவன்.

'குவீன்ஸு'க்குப் போனால் அங்கே நிற்கிறான்; 'காம்பஸு' க்குப் போனால் அங்கே நிற்கி

ருன்; 'பார்க்'குக்குப் போனுல் அங்கே நிற்கிருன்; 'ஓடிய'னுக்குப் போனுல் அங்கேயும்... . .

அவன் யார்?

அது இவளுக்குத் தெரியாது.

கடந்த ஒரு மாத காலமாக இவளைச் சுற்றிச் சுற்றி வந்துகொண்டிருப்பதும், இவள் போகுமிடமெல்லாம் தொடர்வதும், சிறுகச் சிறுக இவள் உள்ளத்தைத் தொட்டதும்தான் தெரியும்.

ஒரு வார்த்தை பேசவில்லை;

பேசாத நிலையிலேயே இந்தக் கிறக்கம்;

நேற்றுப் பேசியிருக்கலாம். நல்ல ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது, 'ஓடிய'னில் படம் பார்த்துவிட்டு மாடிப்படிக்கட்டுகளில் இவள் இறங்கி வந்து கொண்டிருந்தபோது...

'கவுண்ட'ருக்குப் பக்கத்தில் அவன்யாருடனே உல்லாசமாகப் பேசிக்கொண்டிருக்கையில்,

இவள் அவனைப் பார்க்க,

அவன் இவளைப் பார்க்க,

இதழ்கள் விரிந்து புன்னகை மலர இருந்த அந்த நேரத்தில்......

சனியன்மாதிரி குறுக்கே வந்துவிட்டாள், இவளுக்குப் பக்கத்து வீட்டிலிருக்கும் எஞ்சினியரின் மனைவி.

அவள் ஒருமாதிரி. ஒன்றைப் பத்தாக்கி, பத்தைப் பதினுயிரமாக்கக்கூடியவள்.

இப்போது டிரஸ் செய்துகொண்டிருக்கையில் அந்த நினைவு இவளுக்கு வருகிறது;

எஞ்சினியர் மனைவிமீதுள்ள ஆத்திரம் வார்த்தையாக வாயில் தெறிக்கிறது.

"... ..."

இங்கிலீஷ் வார்த்தை; ஆனுல் இங்கிலீசில் கூட அப்படியே இங்கே எழுத முடியாத வார்த்தை.

அவள் டிரஸ்செய்து முடித்துக்கொண்டு கதவைத் திறந்து வெளியே வருவதற்கும் வேலைக்காரி ஒரு 'கிளாஸ்' நிறைய 'ஜூஸ்' கொண்டு வருவதற்கும் சரியாக இருக்கிறது.

அதை வாங்குகிருள். குடிக்கிருள். குடிக்கும்போது தொண்டை நரம்புகள் சிவக்கின்றன.

"அம்மா எங்கே?" என்கிகிருள்.

"பிள்ளையார் கோயிலுக்குப் போயிருக்கிருங்க. இன்னும் வரவில்லை" என்கிருள் வேலைக்காரி;

"சரி, வந்தால் ஒரு ஃபிரெண்டைப் பார்க்கப் போயிருக்கிறேன் என்று சொல்லிவிடு" என்கிருள் இவள்.

மாடிப் படிகளில் இறங்குகிருள்.

அதுவே ஒரு தனி ஸ்டைல்.

பங்களாவின் முன் மண்டபத்தின் இடதுபக்கத்திலிருக்கும் வாசல் வழியாக நுழைந்து கார் 'ஷெட்'டை நோக்கி நடக்கிருள். நடக்கும்போதே "சைமன்......" என்கிருள்.

சைமன் ஓடி வருகிருன். பதினைந்து வயசுப் பையன்.

"சைமன் கார் ஷெட்டைத் திறந்துவிடு" என்கிருள்;

சைமன் கார் ஜெட் கதவுகளைத் திறந்து விடுகிறான். கொக்கியில் தொங்கிக்கொண்டிருந்த 'பொலிஷிங்' துணியினால் காரின் முன்பக்கத்தைத் துடைக்கிறான். துடைக்கும்போதே இவளைப் பார்க்கிறான்.

அளவு, உருவம், உயரம், பருவம், வளர்ச்சி, மதமதப்பு, உடலோடு ஒட்டிய உடை, மறைத்தும் மறைக்காமலும் கிடந்த சில பகுதிகள், சில்லென்று காற்றுப் படுவது போன்ற ஒரு சுகானந்தத்தை ஏற்படுத்தும் நறுமணம், சரீரத்தின் மென்மை, கண்களில் மின்னும் கவர்ச்சி, கார் கதவைத் திறந்து டிரைவிங் ஸீட்டில் அவள் அமரமுயற்சித்தபோது ஏற்பட்ட நெளிவுகளும், சுழிவுகளும், வளைவுகளும், பிடிப்புகளும், காரை ஸ்டாட் செய்வதற்காக அவள் சிறிதே முன்புறம் சாய்ந்தபோது தெரிந்த மழுமழுப்பான, செழிப்பான, கவர்ச்சியான......

—விவரம் தெரியாத நிலையுமல்ல; தெரிந்த நிலையுமல்ல. புரிந்ததும் புரியாததுமான சில உணர்ச்சிகள் சைமனின் உள்ளத்தில் சீறுகின்றன.

கார், ஷெட்டிலிருந்து ஊர்ந்து, நகர்ந்து, வளைந்து பறக்கத் தொடங்குகிறது.

''அப்பா ஏதேதோ செய்து, எப்படியெல்லாமே சம்பாதிச்சுக் கொட்டுகிறார். பெண்ணுக்கு என்ன அனுபவித்துத் தள்ளுகிறாள்; பிறந்தால் இப்படியல்லவா பிறக்கவேண்டும்'' என்று பெருமூச்சு விடுகிறான் சைமன்.

அவள் பேராதனை வீதியில் பறக்கிறாள்.

''எங்கே போகலாம்?'' என்ற யோசனை. ''இன்று எப்படியாவது சந்திக்கவேண்டும்'' என்ற ஆசை!

முதலில் 'பார்க்'குக்குப் போகிறாள்

பதினைந்து நிமிடங்கள்.

அவனைக் காணவில்லை.

காம்பஸுக்கு போகிறாள்.

அவனைக் காணவில்லை.

ஒரு ரவுண்ட்.

---



✣ தமிழரசுக் கட்சித் தலைவர்களுள் மிகவும் அழுத்தமான கொள்கைப் பிடிப்பு உடையவர் சாவகச்சேரித் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் நவரத்தினம்! ''தமிழ் மக்களின் இழந்த உரிமைகள் கிடைக்கும் போதுதான் ஷேவ்செய்துகொள்ளுவேன்'' என்று எப்போதோ எடுத்த சபதத்தை இன்னமும் காப்பாற்றி வருகிறார்! இவரது தாடி வளர்ந்துகொண்டு வருவதைப்போலவே இவரது கொள்கைப்பிடிப்பும்வளர்ந்துகொண்டு வருகிறது!

அவனைக் காணவில்லை.

திரும்புகிறாள்.

கண்டி நகரத்துக் கடை வீதிகளில் இரண்டு மூன்று தரம் சுற்றிச் சுற்றி வருகிறாள்.

வழக்கமாக இப்படியான சந்தர்ப்பங்களில் இதற்கிடையில் ஒரு பத்துத் தடவைக்கு மேல் சந்திந்து விடக் கூடிய அவனை இன்று காணவில்லை.

அவள் வீட்டை விட்டுக் கிளம்பும்போதே இவளுடைய வீட்டிலிருந்து நூறு யார் தூரத்திலிருக்கும் புத்தகக் கடையில், ஏதோ சில புத்தகங்களைப் புரட்டிப் பார்த்தவாறு, இவள் எப்போது வீட்டை விட்டுக் கிளம்புவாள் என்று காவல் கிடப்பானே!

இன்று என்ன நடந்துவிட்டது?

அவனைச் சந்திக்காது வீட்டுக்குத் திரும்ப இவளுக்கு மனசு என்னமோ மாதிரி இருக்கிறது.

கடைவீதியிலிருந்து கிளம்பி 'லேக்'கைச் சுற்றி சுற்றி இரண்டு மூன்று தரம் வருகிறாள்.

'ம்ஹூம்'

குவீன்ஸுக்கு முன்னால் கொண்டுவந்து காரை நிறுத்திவிட்டு உள்ளே செல்லுகிறாள். அங்கே இவள் நுழையும்போதே "ஹலோ..." என்ற குரல் கேட்கிறது. திரும்பிப் பார்க்கிறாள். இவளுடை சிநேகிதி ஒருத்தி!

இவளுடைய கண்கள் பரபரக்கின்றன. அவன் நிற்கின்றானா என்று பார்க்கிறாள். காணவில்லை.

சிநேகிதி கிட்ட வருகிறாள்.

'வெயிட்ட'ரிடம் ஏதோ 'ஓடர்' செய்துவிட்டு இருவருமாக ஒரு மேஜையில் இருந்து பேசுகின்றனர்.

நேரம் போய்க் கொண்டே இருக்கிறது.

மணி 8.00.

அங்கிருந்து இவள் கிளம்பும் வரைக்கும் அவன் வரவேயில்லை!

ஒரு வகையான ஏமாற்றமும் சோர்வும் முகத்தைக் கவ்வுகின்றன.

வீட்டுக்கு வருகிறாள்.

"பரவாயில்லை, இன்றைக்கு இல்லாவிட்டால் நாளைக்குச் சந்திக்காமலா போகப்போகிறார்!' என்று நினைக்கிறாள். நினைக்க நினைக்க அவள் நெஞ்சு நிறைய அவன் நிறைகிறான்!

ஆனால் ...

அவன் இனி அந்தப் பக்கமே வரமாட்டான் என்ற சங்கதி இவளுக்குத் தெரியாது.

இவளுடைய தகப்பனாரின் வியாபார விஷயங்கள் சம்பந்தமாக அரசாங்கத்துக்கு சில புகார்கள் கிடைத்திருந்தன, கள்ளக் கடத்தல், அந்நியச் செலாவணி மோசடி போன்ற விஷயங்களில் அவளது தகப்பனுருக்கும் பங்கு உண்டா என்பதை ஆராய்வதற்காக வந்த ஸி. ஐ. டி அவன்! இவளைச் சுற்றிச் சுற்றி அவன் வந்ததும் இதற்காகத்தான்!

அவன் தனது வேலையை முடித்துக்கொண்டு போய்விட்ட சங்கதி இவளுக்குத் தெரியாது! ●

✣ ஆறுமுகநாவலருக்கும், ஆனந்தக்குமாரசாமிக்கும் 29-10-71ல் நினைவு முத்திரைகளை இலங்கை அரசு வெளியிடுகிறது. ஆறுமுகநாவலரை அறிந்தோர் பலர். ஆனால் ஆனந்தக் குமாரசாமி பற்றி சேர். பொன். இராமனாதனின் மைத்துனர் என்றும், ஒரு தமிழருக்கும் ஆங்கிலப் பெண்மணிக்கும் பிறந்தவரென்றும் கலைத்துறையில் பல நூல்களை ஆக்கியவரென்றும் பொதுவாக அறிந்திருக்கிறோம். அவரைப்பற்றி இன்னும் கொஞ்சம் விரிவாகத் தெரிந்திருக்கவேண்டாமா? பல நூல்களை ஆராய்ந்து ''என் நோக்கில் ஆனந்தக் குமாரசுவாமி'' என்ற சிறு நூலை எழுதி வெளியீட்டியிருக்கிறார் 'ஈழவேந்தன்.' 16 பக்கங்கள். விலை 50 சதம். 'தமிழகம்' 150, சுபத்திர ராமவீதி, நுககொடை என்ற முகவரிக்கு முத்திரைகள் அனுப்பி இந்நூலைப் பெற்றுக்கொள்ளலாம்.

✣ கவிஞர் கந்தவனம் எழுதிய 'கிரிமலையினிலே' என்ற நூலுக்கு ஒரு 'நூல்நயம்' தொகுத்திருக்கிறார் இரசிகமணி கனக. செந்திநாதன். ஏழு பிரபல எழுத்தாளர்கள் நயம் எழுதியிருக்கிறார்கள். சென்ற மாதம் யாழ். இலக்கிய வட்டக் கூட்டத்தில் இச்சிறுநூல் வெளியிடப்பட்டது. விலை ரூபா 1-50. அழகாகப்பதித்து வெளியிட்டிருக்கிறார்கள்: வெற்றிமணி வெளியீடு, 253 - 1/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

✣ உலகத்தலைவர்கள் எல்லோராலும் விரும்பப்படும் ஒரு தலைவராகப் பரிணமித்துக் கொண்டு வருகிறார் நமது பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா! இலங்கையின் கூட்டுச்சேராக் கொள்கையும், உலகப் பிரச்சினைகளில் இவர் காட்டும்



ஆர்வமும்தான் இதற்குக் காரணம்! இலங்கையில் பதவி வகித்த வேறு எந்தப் பிரதமருக்குமே, ஸ்ரீமாவோவுக்கு கிடைத்திருப்பது போன்று, உலகப் பெருந்தலைவர்கள் பலரது நட்பும், இவ்வளவு உலகப் புகழும் கிடைத்தது கிடையாது!

✣ 'லேக்ஹவுஸ்' நிறுவனத்தினரின் அந்நியச் செலவாணி மோசடி நடவடிக்கைகளை விசாரித்த கமிஷனின் அறிக்கையைப் படிக்கும்போதுதான், ''ஊருக்குத்தானடி உபதேசம், உனக்கும் எனக்குமல்ல பெண்ணே'' என்ற முறையில் இந்த நிறுவனத்தின் டைரக்டர்கள் நடந்து கொண்ட முறை தெளிவாகத் தெரிகிறது! இந்த விவகாரம் இத்தோடு முடியப்போகிற விஷயம் அல்ல! இதிலிருந்து தொடரப்போகிற சங்கதிகள் பல இருக்கின்றன!

✣ இனவேறுபாடு, மொழி வேறுபாடு, ஜாதிவேறுபாடு என்பவற்றைக் காட்டிலும் மிகவும் ஆபத்தானது கட்சிவேறுபாடு! கண்மூடித்தனமான கட்சிப் பற்றின் காரணமாக நாட்டில் புதிய முறையில் பல வேறுபாடுகள் தோன்றி வருகின்றன! புதிய தலைமுறையினர் ஆழ்ந்து சிந்திக்கவேண்டிய விஷயங்களுள் இதுவும் ஒன்று!



✣ இந்திரா காந்தியின் பேரனின் பெயர் ராஹுல் காந்தி! எத்தனை வேலைகள் இருந்தாலும் ஒருநாளைக்கு ஒரு தரமாவது தமது மடிமீது வைத்துக் கொண்டு பேரனைக் கொஞ்சுகிறார் இந்திரா காந்தி! எத்தனை பெரிய நாட்டில் எவ்வளவு உயர்ந்த பதவியில் இருந்தாலுமென்ன, பேரனுக்குப் பாட்டிதானே அவர்!

✣ ஒரு மனிதனுக்கு மிகவும் அவசியமான குணங்களில் 'பொறுமை'யும் ஒன்று! பிறர் செய்த தவறுகளைப் பொறுத்துக் கொள்வதற்குத்தான் பொறுமை என்று பெயர்! தனது வேலைகளை ஒத்திப் போடுவதற்குப் பெயர் பொறுமை அல்ல சோம்பல்!

✣ தென்னிந்தியாவில் உள்ள பிராமணர்கள் அங்குள்ள மற்றைய சமூகத்தவர்களைக் காட்டிலும் அறிவாளிகளாகவும் அதிக ஆயுள் உள்ளவர்களாகவும் காணப்படுகிறார்கள்! இதற்குக் காரணம் அவர்களது உணவு முறைதானா என ஆராயத் தொடங்கி இருக்கிறார் அமெரிக்கர் ஒருவர்!

✣ நாட்டிலுள்ள வறுமை ஒழியவேண்டுமானால் உற்பத்தி பெருகவேண்டும், உற்பத்திபெருக வேண்டுமானால் மக்கள் உழைக்கவேண்டும்; மக்கள் உழைப்பதற்குரிய வாய்ப்புக்களை அரசாங்கம் ஏற்படுத்தித் தரவேண்டும். அப்போதுதான் நாடு முன்னேறும்.

✣ பிரச்சினைகளையும் அவற்றைச் சமாளிக்க தாம் கூறும் வழிகளையும் விளக்குவதையே அரசியல் கட்சிகள் தங்களது கடமையாகக் கொள்ளவேண்டும்! ஒருவர்மீது மற்றவர் சேற்றை வாரி அடிப்பதைத் தவிர்க்க வேண்டும்; இப்படிச் செய்தால் தான் நாட்டில் நாகரிகம் வளரும்!


# கென்னடி

## கொலை பற்றிய சில விபரங்களை

# ஜோன்சன்

## மறைத்தாரா ?





அமெரிக்க ஜனாதிபதி கென்னடியின் கொலையில் ஏழு பேர் நேரடியாகச் சம்பந்தப் பட்டிருந்தார்கள் என்றும் இவர்கள் யார் யார் என்பதை ஜனாதிபதி ஜோன்சன் அறிந்திருந்தார் என்றும் சோவியத் பத்திரிகையாளர் ஒருவர்திடுக்கிட வைக்கும் தகவல் ஒன்றை வெளியிட்டு இருக்கிறார்.

கென்னடி கொல்லப்பட்ட 1963ம் வருடம் "டாஸ்" செய்தி நிறுவனத்தின் நிருபராக வாஷிங்டனில் பணியாற்றிய மிக்காயில் சகடெலியான் என்ற இந்த ரஷ்யர் "லா பிகாரோ" என்ற பிரெஞ்சுப் பத்திரிகைக்கு அளித்துள்ள பேட்டியில் இத்தகவலை வெளியிட்டு இருக்கிறார்.


அடுத்த வெளியீடு

### யாழ். ராணி சினிமாவில்

நடிகர் திலகம் சிவாஜி கணேசன் — ஜெயலலிதா
விஜயகுமாரி, முத்துராமன், நாகேஷ், நம்பியார், T. K. பகவதி
முதலியோர் நடித்த
சிவாஜி கணேசனின் 150வது படம்
மல்லியம் புரொடக்ஷன் அளிக்கும்

# சவாலே சமாளி

ஈஸ்ட்மேன் கலர்
கதை — வசனம் — டைரக்ஷன்
மல்லியம் ராஜகோபால்
இந்தியாவில் 100 நாட்களுக்கு மேல் ஓடிய வெற்றிச் சித்திரம்

வரதர் வெளியீடு

## ஐந்தாம் வகுப்பு

# மாதிரி வினாப்பத்திரங்கள்

திருமதி பத்மா சோமகாந்தன் எழுதியவை

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | தமிழ் | — | சதம் | 70 |
| 2. | எண்கணிதம் | — | சதம் | 70 |
| 3. | சூழல் | — | சதம் | 70 |
| 4. | ஆங்கிலம் | — | சதம் | 70 |
| 5. | சைவசமயம் | — | சதம் | 70 |

இப்புத்தகங்களில் ஐந்தாம் வகுப்புப் பரீட்சையில் வருவனபோன்ற பலமாதிரி வினாப்பத்திரங்கள் அடங்கியுள்ளன. பாடத்திட்டம் முழுவதையும் அடக்கி இவ்வினாப்பத்திரங்கள் தொகுக்கப்பெற்றுள்ளனவாதலால், இவற்றை மாணவர் செய்து பழகுவது ஒரு சிறந்த மீட்டற் பயிற்சியாகும். இவ்வினாப்பத்திரப் புத்தகங்களிலேயே மாணவர் விடையெழுதக் கூடியதாக அமைக்கப்பெற்றுள்ளது.

மாணவர் பரீட்சையில் நல்ல சித்தியடைவதற்கு
இப்புத்தகங்கள் மிகவும் உதவியாக அமையும்.

**மாநில விற்பனையாளர்:**

ஆனந்தா அச்சகம், 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்
ரகுநாதன் பதிப்பகம், 303, காலி வீதி, கொழும்பு-3
கலைவாணி புத்தக நிலையம், 130, திருமலை வீதி, கண்டி.
சக்தி நூல் நிலையம், திருமலை வீதி, மட்டக்களப்பு.
வாணி புத்தகசாலை, 80, வித்தியாலம் வீதி, திருகோணமலை.

இந்த நவம்பர் மாதப் பிற்பகுதியில்

இலங்கை எங்கும் கிடைக்கும்!

# ஆனந்தா

திருக்குறள்

# கலண்டர்

எல்லா அம்சங்களும் பொருந்திய

ஒரு கவர்ச்சிகரமான தயாரிப்பு!

**சென்ற ஆண்டில் ஆனந்தா திருக்குறள் கலண்டர்**
**கிடைக்காமல் ஏமாற்றமடைந்தோர் பலர்.**
**ஏமாற்றத்தைத் தவிர்க்க முந்திக்கொள்ளுங்கள்!**

வர்த்தகர்கள் உடனடியாகத் தொடர்புகொள்க:

## ஆனந்தா அச்சகம்

226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

தந்தி: 'அச்சகம்' தொலைபேசி: 348

அச்சிட்டு வெளியிட்டவரும், ஆசிரியரும்: தி. ச. வரதராசன்
அச்சுப்பதிவு: ஆனந்தா அச்சகம், யாழ்ப்பாணம்.